# மே - 31 - புதன்

## அன்னை மரியா எலிசபெத்தை சந்தித்தல்

**ஒவ்வொரு பகலும் அடுத்த பகலுக்கு அச்செய்தியை அறிவிக்கின்றது: ஒவ்வோர் இரவும் அடுத்த இரவுக்கு அதைப்பற்றிய அறிவை வழங்குகின்றது. திபா. 19:2**

### முதல் வாசகம் : செப்போனியா 3 : 14 - 18

மகளே சீயோன்! மகிழ்ச்சியால் ஆர்ப்பரி இஸ்ரயேலே! ஆரவாரம் செய் மகளே எருசலேம்! உன் முழு உள்ளத்தோடு அகமகிழ்ந்து அக்களி. ஆண்டவர் உன் தண்டனைத் தீர்ப்பைத் தள்ளிவிட்டார் உன் பகைவர்களை அப்புறப்படுத்தினார் இஸ்ரயேலின் அரசராகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கின்றார் நீ இனி எந்தத் தீங்கிற்கும் அஞ்சமாட்டாய். அந்நாளில் எருசலேமை நோக்கி இவ்வாறு கூறப்படும் "சீயோனே, அஞ்ச வேண்டாம் உன் கைகள் சோர்வடையவேண்டாம். உன் கடவுளாகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கின்றார் அவர் மாவீரர் மீட்பு அளிப்பவர் உன்பொருட்டு அவர் மகிழ்ந்து களிகூருவார் தம் அன்பினால் உனக்குப் புத்துயிர் அளிப்பார் உன்னைக் குறித்து மகிழ்ந்து ஆடிப்பாடுவார். அது திருவிழாக் காலம்போல் இருக்கும். உனது துன்பத்தை அகற்றிவிட்டேன் ஆகவே, இனி நீ இழிவடைய மாட்டாய்.

**பதில்பாடல் :** இஸ்ரவேலின் தூயவர் உங்களிடையே சிறந்து விளங்குகின்றார்.

### நற்செய்தி : லூக்கா 1 : 39 - 56

அக்காலத்தில் மரியா புறப்பட்டு யூதேய மலைநாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார். அவர் செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்தினார். மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார். அப்போது அவர் உரத்த குரலில், "பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர் உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே! என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? உம் வாழ்த்துரை என் காதில் விழுந்ததும் என் வயிற்றினுள்ளே குழந்தை பேருவகையால் துள்ளிற்று. ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்" என்றார். அதைக் கேட்ட மரியா பின்வருமாறு கூறினார் "ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது. ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர். ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர். அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார். அவர் தம் தோள் வலிமையைக் காட்டியுள்ளார் உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து வருகிறார். வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார் தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார். பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார் செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுகிறார். மூதாதையருக்கு உரைத்தபடியே அவர் ஆபிரகாமையும் அவர்தம் வழி மரபினரையும் என்றென்றும் இரக்கத்தோடு நினைவில் கொண்டுள்ளார். தம் ஊழியராகிய இஸ்ரயேலுக்குத் துணையாக இருந்து வருகிறார்". மரியா ஏறக்குறைய மூன்று மாதம் எலிசபெத்தோடு தங்கியிருந்த பின்பு தம் வீடு திரும்பினார்.

**தியானம்:** கடவுளை மறந்துவிடாமல் வாழும்படி கடவுள் கொடுத்த எச்சரிப்பை மறந்து, வளர்ச்சியடைந்த வளர்முக நாடுகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்கள் மட்டுமன்றி, அந்நாட்டில் குடிபுகுந்த மக்களும், மேற்குலக கலாச்சாரம், நாகரீகம், விஞ்ஞானம் ஆகியவற்றால் பாதிப்படைந்து கடவுளை மறந்து சாத்தானின் வலையில் அகப்பட்டு வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இம்மண்ணுலகில் வாழும் வாழ்க்கையை மட்டும் கருத்தில் கொண்டு புசிப்போம், குடிப்போம் நாளைக்கு மரிப்போம் என்ற எண்ணமுடையோராய் வாழும் அன்றைய சந்ததியினருக்கு எடுத்துக்காட்டாக இன்றைய முதல் வாசகம் அமைவதைக் காண்கிறோம். கிறிஸ்த்தவ விசுவாசத்தின் முக்கியமான அடிப்படையான உண்மை இயேசுக் கிறிஸ்து கடவுளால் அனுப்பப்பெற்று மனுக்குலத்தைப் பாவத்திலிருந்து மீட்டுக்கொண்டதேயாகும். ஆனால் கிறிஸ்த்துவின் காலத்திலும் அவரது உறவினர்களோ, அவர்சார்ந்த யூதர்களோ அவரை ஒரு மெசியாவாக ஏற்றுக் கொண்டதேயில்லை. ஆனால் இயேசு நான் யார்? என்பதை இன்றைய நற்செய்தியினூடாக அவர்களுக்கு எடுத்துக் கூறுவதை பார்க்கின்றோம். எனவே உயிர் வாழ்வதற்கு எதை உண்போம்? என்ன உடுப்போம்? என்று கவலைப்படாமல் உணவை விட உயிரும் உடையை விட உடலும் முக்கியம் என்பதை நாம் உணர வேண்டும். நாளைக்கு எறியும் காட்டுப்புல்லுக்கே கடவுள் எவ்வாறு உடுத்துகிறார் என்றால் அவைகளை விட மேலாகப் படைக்கப்பட்ட எமக்கு எவ்வளவு செய்வார். ஆகையால் அன்பு, தாழ்ச்சி ஆகிய இரு குணங்களை எம்மனதில் கொண்டு கசப்பு, பகை, வன்மம், வைராக்கியம் தற்பெருமை என்பவற்றைக் களைந்து இயேசுவின் இதயத்தினுள் நுழைந்து அவரோடு நாம் நடக்க எம்வாழ்வை அமைத்துக் கொள்வோம்.